සියලුම හිමිකම් ඇවිරිණි ]
முழுப் பதிப்புரிமையுடையது ]
All Rights Reserved ]

| வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| மொத்தம் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் /
Department of Examinations, Sri Lanka

**இலங்கை மத்திய வங்கியின் விரைவுபடுத்தப்பட்ட பதவியுயர்வுத் திட்டத்தின் கீழ் உயர் பதவி அல்லாத வகுப்பு ஊழியர்களை உயர் பதவி அலுவலர் வகுப்பு தரம் I இற்கு பதவியுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2018**

Limited Competitive Examination for the Promotion of Employees in Non - Staff Class to Staff Class Grade I under the Accelerated Promotion Scheme of the Central Bank of Sri Lanka - 2018

**(01)** பகுப்பாய்வு செய்து எழுதுதல்
Analytical Writing

**இரண்டு மணித்தியாலங்கள்**
Two hours

எல்லா வினாக்களுக்குமான விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக. **சுட்டெண் :** ..............................

**1.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு **சுருக்கமாக** விடை தருக.

> வெளிநாட்டுத் துறையின் உறுதித்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் பொருத்தமான கொள்கை வழிமுறைகளின் காரணமாக நடுத்தர காலத்தில் வெளிநாட்டுத் துறையின் தோற்றப்பாடு படிப்படியாக முன்னேற்றமடையுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. வெளிநாட்டுத் துறையில் எதிர்வு கூறப்பட்ட அபிவிருத்திகளுடன் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை உறுதியான அடிப்படையில் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இறக்குமதிகளிலும் பார்க்க ஏற்றுமதிகள் உயர்ந்தளவு வீதத்தில் அதிகரிக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளமையானது நடுத்தர காலத்தில் வர்த்தகப் பற்றாக்குறையில் குறுக்கமொன்றினைத் தோற்றுவிக்கும். பொதுவாக்கப்பட்ட முன்னுரிமையளிக்கப்பட்ட (GSP+) சலுகைகள் மீளக் கிடைத்தமை மற்றும் உத்தேச வர்த்தக மற்றும் பொருளாதாரப் பங்குடமை உடன்படிக்கைகள் என்பன உட்பட மேம்பட்ட வர்த்தக இணைப்புக்களினூடான ஆதரவுடன் ஏற்றுமதிச் சந்தையின் உயர்வானது உள்நாட்டு உற்பத்திகளைச் சார்ந்த உயர் ஏற்றுமதிகளிலிருந்து தோற்றுவிக்கப்படுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. உலகளாவிய எண்ணெய் விலைகளில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்புடன் குறிப்பாக உயர்ந்த இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் அதிகரிப்பு மற்றும் எதிர்வு கூறப்பட்ட முதலீட்டுச் செலவினத்தின் அதிகரிப்பின் காரணமாக முதலீட்டுப் பொருட்களுக்கான உயர்ந்த கேள்வியினால் இறக்குமதிச் செலவுகள் தொடர்ந்தும் அதிகரிக்கப்படும்.

*(05 × 5 = 25 புள்ளிகள்)*

(i) இறக்குமதிச் செலவு தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதாக இந்த ஆசிரியர் கூறுவதன் காரணம் யாது?

..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

(ii) நடுத்தர காலத்தில் வர்த்தகப் பற்றாக்குறையானது எத்தகைய நிலைமையில் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

(iii) எந்த நிலைமையின் விளைவாக, வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை படிப்படியாக மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது?

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(iv) ஏற்றுமதியானது எந்தவகையில் அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது?

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(v) உலகளாவிய ரீதியில் எண்ணெய் விலைகளில் ஏற்படக்கூடிய அதிகரிப்போடு உண்டாகக்கூடிய மாற்றங்கள் எவை?

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

**2.** கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் 2012/2013 ஆம் ஆண்டுகளில், இலங்கையின் மாகாணங்களில் பெறப்பட்ட வெளிச்ச வகைகளின் சதவீதம் காட்டப்பட்டுள்ளது. அட்டவணையில் உள்ள அடிப்படைத் தரவுகளை உரியவாறு ஒப்பிட்டு ஆராய்ந்து **150 சொற்களுக்கு மேற்படாத** வகையில் விவரித்து அறிக்கையொன்று எழுதுக.

*(25 புள்ளிகள்)*

| வெளிச்சங்களை பெறும் வகைகள் / மாகாணம் | மின்சாரம் (%) | மண்ணெண்ணெய் (%) | சூரிய சக்தி (%) | பிற (%) |
|---|---|---|---|---|
| மேல்மாகாணம் | 97.6 | 2.2 | 0.2 | – |
| மத்திய மாகாணம் | 92.5 | 7.1 | 0.4 | – |
| தென் மாகாணம் | 94.4 | 5.2 | 0.3 | 0.1 |
| வட மாகாணம் | 66.0 | 31.9 | 2.0 | 0.1 |
| கிழக்கு மாகாணம் | 79.9 | 19.6 | 0.5 | – |
| வட மேல் மாகாணம் | 89.1 | 9.4 | 1.5 | – |
| வட மத்திய மாகாணம் | 87.4 | 11.1 | 1.0 | 0.5 |
| ஊவா மாகாணம் | 83.7 | 14.1 | 2.0 | 0.2 |
| சப்ரகமுவா | 88.2 | 11.0 | 0.8 | – |

.................................................................................................................................

.................................................................................................................................

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

....................................................................................................................................................

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka

/பக். 4 ஐப் பார்க்க

**3.** கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியை வாசித்து, அதன் சாராம்சத்தை **மூன்றி**லொரு பங்காகச் சுருக்கி எழுதுக. பொருத்தமான ஒரு **தலைப்பினையும்** இடுக. சுருக்கத்தில் பயன்படுத்திய சொற்களின் **எண்ணிக்கையினையும்** இறுதியிற் குறிப்பிடுக.

கல்வியின் தரம் ஆசிரியர்களின் தரத்தின் நியதிகளில் தங்கியிருப்பதனால், உயர்தர ஆற்றல் கொண்ட பட்டதாரிகளிடையே தொழில்சார் தகைமையொன்றாக கற்பித்தலை பிரபல்யப்படுத்துவதற்கு நீண்ட கால உபாயங்களை விருத்தி செய்வது கொள்கை வகுப்போருக்கு இன்றியமையாததாகும். சிறந்த பயில்தல் பெறுபேறுகளை வழங்குவதில் பாடசாலையின் வெற்றியை முக்கியமாகத் தீர்மானிக்குமொன்றாக, அதிபர்களது தரத்தைத் தரமுயர்த்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். மேலும், இலவசக் கல்வி வழங்கப்படுகின்ற போதும் வறிய பின்னணியைக் கொண்ட மக்கள் உயர்தர வருமானத்தினைக் கொண்ட இணைத்தரப்பினரைவிட ஒரு சில ஆண்டுக் கல்வியையே பெற்றுக் கொள்வதனையும் கிராமப்புறத்திலுள்ளவர்கள் குறைந்தளவு கல்வியையே பெற்றுக் கொள்வதனையும் வறிய மற்றும் கிராமிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கான கல்வியிலும் பயிற்சியிலும் குறிப்பிடத்தக்க அளவிற்கு சமமற்றதன்மை காணப்படுவதனையும் ஆய்வுகள் காட்டுகின்றன. மேலும், அரச பாடசாலைகளின் பணி வழங்கல்களில் காணப்படும் சமமற்றதன்மை பிரபல்யம் பெற்ற பாடசாலைகளில் இடம்பிடிப்பதற்கு மிகையான கேள்வியைத் தோற்றுவிக்கின்ற வேளையில் மற்றைய பாடசாலைகளின் வளங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. புறநகர் பாடசாலைகளின் தரத்தினையும் கவர்ச்சித்தன்மையினையும் மேம்படுத்துவது தொடர்பான அண்மைய அரசாங்கக் கொள்கைகள் பாராட்டத்தக்கனவாகவுள்ள வேளையில் அத்தகைய கொள்கைகளின் வெற்றியினை இன்னும் எய்தவில்லை. மேலும், நகர்ப்புறங்களில் பாடசாலைகளில் இடம்பிடித்துக் கொள்வதற்கான மிகையான கேள்வியை நிறைவு செய்வதில் தனியார் பாடசாலைகள் ஆற்றுகின்ற அதிகரித்த பங்கிற்கு வசதிகள் வழங்கப்படவேண்டிய வேளையில் இப்பாடசாலைகளில் பெரும்பாலானவை எந்தவொரு ஒழுங்குமுறைப்படுத்தல் சபையின் அதிகார வரம்பிற்குள்ளும் வராமையால் பணி வழங்குவதில் அவற்றின் தரத்தினையும் ஒருமுகத்தன்மையினையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். துணைத் தேர்வு கல்வி நிறுவனங்களின் தொழிற்பாடு அவற்றினையொத்த நிறுவனங்களின் தரத்திற்குக் குறிப்பிடத்தக்களவில் பின்தங்கியிருக்கின்ற போதும், குறிப்பிடத்தக்களவு நிதியியல் செலவினை ஏற்படுத்துவனவாகவுள்ளன.

*(20 புள்ளிகள்)*

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

4. கீழே தரப்பட்டுள்ள விளக்கக் குறிப்புகளை வாசித்து அவற்றிலுள்ள விடயங்களுக்குப் பொருத்தமாக பகுப்பாய்வு ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் அமைந்த கட்டுரை ஒன்றினை எழுதுக. சொற்களின் எண்ணிக்கை **250-300** இடைப்பட்டிருத்தல் வேண்டும். கட்டுரைக்குப் பொருத்தமான **தலைப்பு ஒன்றினையும்** இடுக.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு அபிவிருத்தி அடைந்த நாடுகள் அவ்வப்போது உதவிகள் வழங்கி வருகின்றன. இந்த உதவிகள் பெருமளவில் நிதி வழங்குவதான போக்கையே கொண்டுள்ளன. இத்தகைய நிதியுதவிகள் அடிப்படைத் திட்டப் பணிகளுக்கு பயன்படுத்தப்படுவதால் உதவிகள் மூலம் எதிர்பார்க்கப்படும் பலன்களைப் பெறமுடியாமல் போகும் சந்தர்ப்பங்கள் பலவாகும். ஆகவே அபிவிருத்தித் திட்டங்களுக்காக வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் போது நிதியுதவியாக அன்றி இயந்திர உபகரணங்கள், ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளுதல் அதிக பலன் அளிக்கக்கூடியதாகும்.

*(30 புள்ளிகள்)*

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

***

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,